செய்தி வெளியீடு எண்: 11/ 2021 நாள்: 12.01.2021

## தேசிய அளவில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இன்று (12.01.2020) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் 2018 – 2019ஆம் ஆண்டிற்கான தேசிய அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பயிற்சி பெறுவதற்கு காஞ்சிபுரம் மாவட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் ஊக்கத் தொகையினை காசோலையாக வழங்கினார்.

2018–2019 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தமிழ்நாட்டின் சார்பாக கலந்து கொண்டு காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட 2 வீரர்கள், 1 வீராங்கனை தங்கப்பதக்கமும், 2 வீராங்கனைகள் வெள்ளிப் பதக்கமும் மற்றும் 2 வீரர்கள், 1 வீராங்கனை என மொத்த 8 மாணவ, மாணவியருக்கு வென்றுள்ளனர். இவர்களில் முறையே தங்க பதக்கம் வென்றவருக்கு ரூ.6,000/–ம், வெள்ளி பதக்கம் வென்றவருக்கு ரூ.4,000/–ம், மற்றும் வெண்கல பதக்கம் வென்றவருக்கு ரூ.2,000/– என மொத்தம் ரூ.32,000/–க்கான ஊக்கத்தொகையினை விளையாட்டு வீரர்கள் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பயிற்சி மேற்கொள்வதற்கு இம்மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று (12.01.2020) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பயிற்சி பெறுவதற்கு ஊக்கத் தொகையினை காசோலையாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் எஸ். ரமேஷ் மற்றும் வீரர், வீராங்கனைகள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், காஞ்சிபுரம் மாவட்டம்
## 2018–2019ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகள்

| வ.எண் | பெயர் | விளையாட்டு | இடம் (I/II/III) | பரிசுத் தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | E. கோகுல் | சிலம்பம் | தங்கப்பதக்கம் | ரூ. 6000/– |
| 2. | P. சரண்யா | சிலம்பம் | வெண்கலப்பதக்கம் | ரூ. 2000/– |
| 3. | T. அபியா | கராத்தே | வெள்ளிப்பதக்கம் | ரூ. 4000/– |
| 4. | B. நர்மதா | Throwball | தங்கப்பதக்கம் | ரூ. 6000/– |
| 5. | T. தரூண் குமார் | Roller Skating | வெண்கலப்பதக்கம் | ரூ. 2000/– |
| 6. | G. புவனேஷ் ரெட்டி | Roller Skating | வெண்கலப்பதக்கம் | ரூ. 2000/– |
| 7. | J. கார்த்திகா | Roller Skating | வெள்ளிப்பதக்கம் | ரூ. 4000/– |
| 8. | G. ஆதி சங்கரன் | Roller Skating | தங்கப்பதக்கம் | ரூ. 6000/– |